2021 பிப்ரவரி 27]

கடந்த நான்கு ஆண்டுக் காலம் தமிழகத்திற்கு, தமிழக மக்களுக்கு பல திட்டங்களை அவர் நிறைவேற்றித் தந்து, தமிழக மக்களின் துயரங்களைத் தீர்த்தாரோ, அதேபோல் வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்று மீண்டும் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, இந்த அரியணையிலே அமர்ந்து மக்கள் பணி ஆற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் தொகுதியில் இருக்கின்ற பிரச்சினைகள், நான் கொடுத்த கோரிக்கை மனுக்கள் அனைத்திற்கும் பதில் மட்டும் அளிக்காமல், அதை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாவட்டச் செயலாளர் அவர்களையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், இராயப்பனூர் ஊராட்சியிலே பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடத்தைக் கட்டித் தந்த நமது மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சின்னசேலத்தில் இயங்கி வரும் பால் குளிரூட்டும் நிலையத்தைத் தரமுயர்த்தி, பால் பண்ணையாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. பிரபு அவர்களுடைய கோரிக்கை உரிய முறையில் துறைக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

மாணவர் விடுதி

***8091—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, அரட்டவாடியில் ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் ஆட்சியை, மூன்றாவது முறை தொடர்ந்து அமர்த்தவுள்ளனர். ஆகவே, விவசாயிகளின், உழைப்பாளிகளின், மாணவர்களின் நம்பிக்கை நட்சத்திரம், மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களையும், முதல்வரின் கரத்தை தன் நேசக் கரத்தால் வலுப்படுத்தும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை துறைக்கு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

இலக்கியப் பயிற்சிப் பட்டறை

***73208—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 பிப்ரவரி 27]

(அ) சேலம் மாவட்ட இசைப் பள்ளியில் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழரின் பெருமையை உயர்த்திப் பிடிக்கும் கீழடி முதல் கொற்கை வரை 20 தொல்லியல் அகழ்வாய்வுகள்; 343 சிறந்த செவ்வியல்; நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள்; 60,000 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாரியம்மூலம் மும்மடங்கு பண உயர்வு; தேனி, திருவண்ணாமலை, அரியலூர் ஆகிய மாவட்டங்களில் புதிய அருங்காட்சியகம் உருவாகும் என்ற அறிவிப்பு; மற்றும் மாண்புமிகு டாக்டர் விஜய பாஸ்கர் அவர்கள் சொன்னதுபோல் எட்டு அவதாரத்தோடு, 9 ஆவது அவதாரமாக கலைகளின் தாயகம் என்ற பெருமையை மீட்டெடுத்த ‘கலைகளின் காப்பாளர்’, என்ற அவதாரம் எடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்ப் பண்பாட்டின் உச்சமான ஏறு தழுவுதலை மீட்டெடுத்து,* Harvard, Houston, Toronto *ஆகிய பல்கலைக்கழகங்களில் தமிழுக்கு தகைசால் ஆய்வு இருக்கை அமைத்திட 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் இந்த நல்ல நேரத்தில் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) 2013 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டு வருகிறது. சென்னை, கோவை, சேலம், மதுரை, திருச்சி ஆகிய ஐந்து மண்டலங்களில், ஒரு வாரப் பயிற்சி, மாவட்டந்தோறும் 6 பேர் வீதம், 100 பேருக்கு, ஆண்டுக்கொருமுறை நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 2,000 நபர்கள் பயிற்சி பெற்று உள்ளனர். சென்ற நிதியாண்டில் மதுரையில் நடத்தப்பட்டது. அடுத்த கட்டமாக சேலத்தில் நடத்துவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட சேலம் இசைப் பள்ளியில் பயிலும் மாணவர்களும் இதில் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுமென்ற கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில், அறிவியல் தமிழை நான்காம் தமிழாகச் சேர்த்த மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்கள் வழியிலே இன்றையதினம் அறிவியல் தமிழுக்கு மெருகூட்டி, அதற்கு வலு சேர்க்கின்ற வகையில், 6 ஆம் வகுப்பில் படிக்கின்ற பள்ளி மாணவர்களுக்கு எல்லாம் அறிவியலில் கணினி அறிவியலைப் புகுத்தி, மாணவச் சமுதாயத்தின் கல்விக் கடவுளாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டுகின்ற அனைத்துத் திட்டங்களையும் செயலாக்குவதற்கு, அவருக்கு ஆக்கம் அளித்து, உறுதுணையாகவும் இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். இந்தக் கேள்விக்குப் பதில் அளித்த துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், வாய்ப்பளித்த தங்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

சேலம் மாவட்டத்தில் உள்ள இந்த இசைப் பள்ளியில் சேலம் மண்டலத்தில் இருக்கின்ற அனைத்து மாணவர்களையும் ஒன்றிணைத்து பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில், நாடகக் கலைக்கு குருவாக இருக்கின்ற சங்கரதாஸ் சுவாமிகளின் குருபூஜை விழாவினை அரசு விழாவாக அறிவித்து, அவருக்குப் பெருமை சேர்க்கின்ற விதத்தில், இன்றையதினம் கலைஞர்களுக்கெல்லாம் உற்சாகத்தை ஊட்டுகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். உலக நாடக தினம் என அறிவித்து, அதனைத் தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடி, சேலம் மாவட்டத்தில், உலக நாடக தினத்தில் சுவாமி எழுதிய வள்ளித் திருமணம் நாடகத்தை அரங்கேற்றம் செய்து வைத்துள்ளார்கள். அந்த வகையில், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற இசைப் பள்ளியில் ஆண்டு முழுவதும் செயல்படுத்தக்கூடிய வகையில், பெருமை சேர்க்கின்ற வகையில், இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையை அமைத்துத்தர வேண்டுமென்றும், இசைப் பள்ளியை இசைக் கல்லூரியாக உருவாக்கி, தரமுயர்த்தித் தர வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.